**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# பிராம்ப்டன் பிராந்திய கவுன்சிலராகிய ரொவீனா சான்ட்டோஸ் அவர்கள் கனடா நாட்டு நகராட்சிகளுக்கான வாரியத்தின் கூட்டமைப்பிற்கு 2023-2024 காலத்திற்காக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

பிராம்ப்டன், ON (மே 29, 2022) – கனடிய நகராட்சிகளின் கூட்டமைப்பு (FCM) ஆனது, தனது வாரியத்திற்காக பிராம்ப்டன் கவுன்சிலராகிய ரொவீனா சான்ட்டோஸ் அவர்களை தொடர்ந்து நான்காவது முறையாகத் தேர்ந்தெடுத்துள்ளது.

1901 ஆம் ஆண்டு முதலே FCM என்பது கனடா நாட்டு நகராட்சி ஆளுமைகளுக்கு தேசிய குரலாக இருந்து வந்துள்ளது. நாடு முழுவதிலுமாக 90 சதவீத அனைத்து கனடிய மக்களுக்கும் பிரதிநிதித்துவம் செய்கின்ற 2,000 க்கும் அதிகமான நகராட்சிகள் இதில் அங்கம் வகிக்கின்றன. கனடா நாட்டு நகராட்சிகளின் கூட்டமைப்பின் வருடாந்திர மாநாடு மற்றும் வர்த்தக கண்காட்சியானது மே 25 முதல் – 28 வரை நடத்தப்பட்டது; இந்த ஆண்டிற்கான இதன் மூலக்கருவானது *உள்ளூர் செயல்பாடு, தேசீய பலன்கள் (Local Action, National Results)* என்பதேயாகும்.

கவுன்சிலர் சான்ட்டோஸ் அவர்கள் FCM இன் வாரியத்தில் 2020 ஆம் ஆண்டிலிருந்தே சேவையாற்றிவருகிறார். இனப்பாகுபாடு எதிர்ப்பு மற்றும் சமத்துவத்திற்கான குழு துவக்கப்பட்டதிலிருந்தே துணைத்தலைவராக இருந்தபடி இதற்கான தூணாக இருந்து, சேவை செய்து வருகிறார்; மற்றும் முன்னேறிச்செல்வதற்கான முன்னுரிமை கொண்ட விஷயமாக அனைவரையும் உள்ளடக்கும் வகையிலான சூழலைப் போற்றி வளர்க்கவும் வேலை செய்கிறார்.

ஒவ்வொரு வருடமும், முக்கிய பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்கவும் கூட்டமைப்பு அரசிடமிருந்து ஆதரவு மற்றும் நிதி பெறுவதற்கான வாதிடுதலையும் செய்வதற்கான ஒரு வாய்ப்பினை இந்த மாநாடு வழங்குகிறது. நகர நிர்வாகம் வாதிடவிருக்கின்ற 2023 ஆம் ஆண்டிற்கான முன்னுரிமை கொண்ட விஷயங்களில் அடங்குபவை:

• இன்னும் சிறப்பான பேருந்துப் போக்குவரத்தினைக் கட்டமைப்பதற்கான ஒரு கடப்பாடு;

• பிராம்ப்டன் நகரகுடியிருப்புவாசிகளுக்கு வீட்டுவசதி அமைத்துக் கொடுத்தலில் விருப்பத்தேர்வுகளை வழங்குதல் மற்றும் அவர்களை செழிப்படைய வைத்தல்;
• செயலூக்கமான போக்குவரத்து உள்கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த, நிலைத்து நிற்கவல்ல நிதி அமைத்துக் கொடுத்தல்;
• காலநிலை மாற்றத்திற்கு மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மைக்கு தகவமைத்தலை முன்னெடுப்பதற்கான முதலீடு செய்தல்; மற்றும்,
• பொருளாதார வளர்ச்சி மற்றும் மீட்டெடுப்பு, வேலை வாய்ப்புக்கள் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றுக்காக முதலீடு செய்தல்.

நகரம் வாதிடவிருக்கின்ற விஷயங்கள் பற்றிய மேலும் தகவல்கள் பிராம்ப்டன் நகரின் வலைத்தளத்தில் கிடைக்கின்றன.

**அறிஞர் கூற்றுக்கள்**

“மீண்டும் தேர்வு செய்யப்பட்டு மற்றும் கனடா நாடு முழுக்கவுமாக இருந்து வருகின்ற சக கவுன்சிலர்களுடன் சேர்ந்து சேவையாற்றுவது ஒரு கௌரவமான விஷயமாகும். நாடு முழுக்கவுமாக தைரியமாக, ஒருங்கிணைப்புடன் செயல்படுவதன் மூலம் நகராட்சிகளுக்காக நாம் தொடர்ந்து குரல்கொடுக்க முடியும்; இதில் *உள்ளூர் செயல்பாடு, மற்றும் தேசீய பலன்கள்* இருக்கும். அனைவருக்கும் ஆதரவளிக்கும் வகையிலான சுற்றுச்சூழல் மற்றும் அனைவரையும் உள்ளடக்கும் வகையிலான இடம் ஆகியவற்றின் மீது கவனம் குவிப்பதன்மூலம் இன்னொரு வருடமும் பிராம்ப்டனுக்கான உழைப்பதில் நான் மெய்சிலிக்கிறேன்.”
*- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 மற்றும் 5, பிராம்ப்டன் நகரம்*

“நமது கவுன்சிலர் *சான்ட்டோஸ்* அவர்களின் குரல் FCM இன் வாரியத்தில் ஒலிக்கச்செய்வதற்கு நாம் மிகவும் அதிர்ஷ்டம் செய்திருக்கிறோம்; இது நமது நாடு முழுக்கவுமாக இருக்கும் சமுதாயத்தினரை, மேன்மையடையச் செய்ய, முக்கியமான விஷயங்களை முன்னெடுத்துச் செல்லும். இன்னுமோர் வருடத்திற்கு FCM இன் இயக்குனர்கள் மன்றத்தில் சேவையாற்ற தேர்ந்தெடுக்கப்பட்டமைக்காக, பிராம்ப்டன் நகர சபையின் சார்பாக நான் கவுன்சிலர் சான்ட்டோஸ் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”
*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், பிராம்ப்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 90,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca